# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 401/2019

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : Tr. எத்திராஜ் |
| Father/Husband's Name | : ஈஸ்வர் |
| Village | : நெ.38/22, மவுணசாமி மடம் தெரு |
| Taluk | : வில்லிவாக்கம், சென்னை 600049 |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2024.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது சென்னை வில்லிவாக்கத்தில் வசித்து ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 09.03.2019 அன்று எங்கள் அலுவலகத்தில் என்னுடன் பணிபுரியும் நண்பரின் திருமணத்திற்காக எங்களின் டீம்லீடர் ஆனந்தசந்தருடன் சேர்ந்து காரில் சென்றோம். அந்த வாகனத்தின் எண் தெரியாது. ஆஜர் எதிரி தான் எங்கள் டீம்லீடர் ஆனந்த்சந்தர். அடுத்த நாள் திருமணத்தை முடித்துவிட்டு காலை 10.00 டூ 10.30 மணிக்கு அதே காரில் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போது நான் நன்றாக தூங்கிவிட்டேன். நான் டிரைவர் சீட்டிற்கு பின்புறம் அமர்ந்திருந்தேன். ஆஜர் எதிரி தான் காரை ஓட்டினார். எனக்கு என்ன நடந்தது என்று எதுவும் தெரியிவல்லை. விபத்து நடந்த பிறகும் என்ன நடந்தது என்று தெரியிவல்லை.

எனது தலையில் அடிப்பட்டவுடன் அரைமணி நேரம் நான் சுயநினைவு

இழந்துவிட்டேன். 20 நாட்கள் நான் கோமாவில் இருந்தேன். எனக்கு சுயநினைவு வந்த பிறகு தான் தலையில் அடிப்பட்ட விவரத்தை எனது குடும்பத்தார்கள் சொன்னார்கள். விபத்தில் காரில் பயணம் செய்தவர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டதாகவும், டிரைவர் சீட்டிற்கு பக்கத்தில் அமர்ந்திருந்த பெண் ஒருவர் சம்பவயிடத்தில் இறந்துவிட்டதாகவும் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து எதனால் நடந்தது என்று எனக்கு தெரியாது.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது அலுவலகத்தில் எனக்கு தலைமை பொறுப்பில் இருப்பவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரி கவனகுறைவாக வாகனத்தை ஓட்டி வந்ததால் சடன்பிரேக் போட்டு வாகனம் இடதுபுறம் திருப்பியதில் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் நான் தூங்கிவிட்டதால் எனக்கு எதுவும் தெரியாது. நான் எனது போலிஸ் விசாரணையில் ஆஜர் எதிரி சடன்பிரேக் போட்டதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் நான் தூக்கத்தில் இருந்ததால் எனக்கு எப்படி விபத்து நடந்தது என்று தெரியாது போலிசார் என்னை எந்த விசாரணையும் செய்யவில்லை. ஆஜர் எதிரி எனது உயர் அதிகாரி என்பதால் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு விபத்து ஆஜர் எதிரியின் கவனகுறைவால் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.